ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2078/27 - 2018 ජූලි මස 03 වැනි අඟහරුවාදා - 2018.07.03

2078/27 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், கம்பஹா, அத்தனகல்லை - மினுவன்கொடை இணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் உள்ளிழுப்பு நீர் இறைக்கும் இயந்திரசாலை மற்றும் அதற்குரிய கட்டிடம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினைச் சுவீகரித்துக்கொள்ள வேண்டியுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,<br>
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,<br>
இலக்கம் 35,<br>
புதிய பாராளுமன்ற வீதி,<br>
பெலவத்தை,<br>
பத்தரமுல்லை,<br>
2018, யூன் 14.<br>
5/2/2/1383

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தின், அத்தனகல்லை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 365-சீ, கரஸ்நாகல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கரஸ்நாகல கிராமத்தில் அமைந்துள்ள பலுதங்கொல்லகலே என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 1 ஏக்கர் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு: பஸ்நாகொட ஆறு மற்றும் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் உரிமை கோருகின்ற கொரொக்கொடுவ வத்த காணி;
கிழக்கு : கே. ஏ. சுனில் உரிமை கோருகின்ற பலுதங்கொல்லகலே காணி;
தெற்கு : பலுதங்கொல்லகலே பொது மயானம்;
மேற்கு : குருநாகல் பொருந்தோட்ட நிறுவனம் உரிமை கோருகின்ற கொரொக்கொடுவ வத்த காணி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும்* : திரு. ஆர். ஏ. பியசேன,
கரஸ்நாகல,
வெயன்கொட.

07 - 554

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு தெஹிவளை - கல்கிஸ்சை கழிவுநீர் அகற்றும் கருத்திட்டத்தின் கீழ் 04 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினுடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35,
லக்திய மெதுர,
புதிய பாரளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2018, யூன் 14.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தின், கஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 535A, பெல்லன்வில கிராம அலுவலர் பிரிவில், பெல்லன்வில கிராமத்தில் விஹாரமாவத்தையில், இலக்கம் 145 உடைய காணிக்கு அருகாமையில் அமைந்துள்ள 06 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : 145 ஆம் இலக்க காணி;
கிழக்கு : நடைப்பயிற்சிப் பாதை;
தெற்கு : உரிமையாளரை கண்டறியமுடியாதுள்ள தரிசுநிலம்;
மேற்கு : விஹாரமாவத்தை.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும்* : கண்டறிய முடியவில்லை.

07 - 555

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு தெஹிவளை - கல்கிஸ்சை கழிவுநீர் அகற்றும் கருத்திட்டத்தின் கீழ் 6 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினுடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35,
லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2018, யூன் 14.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தின், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 538, களுபோவில கிராம அலுவலர் பிரிவில், களுபோவில கிராமத்தில் ரத்னாவலீ வீதியில் அமைந்துள்ள இலக்கம் 19 உடைய வீட்டுக் காணிக்கு அருகாமையிலுள்ள அண்ணளவாக 3 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : 19 ஆம் இலக்க வீட்டுக் காணி;
கிழக்கு : இக்காணியின் மீதமாயுள்ள பகுதி;
தெற்கு : தாவர நாற்றுக்காணி;
மேற்கு : ரத்னாவலீ வீதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும்* : கண்டறிய முடியவில்லை.

07 - 556

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.